

POLICE

# சுவிட்சர்லாந்தில் பாதுகாப்புடன் ஒன்றாக வாழ்தல்





# நல்வரவு!

சுவிட்சர்லாந்தில் ஒன்றாக வாழ்வதற்கான மிக முக்கியமான விதிகள் சுவிஸ் கூட்டாட்சி அரசியலமைப்பில் உள்ளன. அரசியலமைப்பு மற்ற அனைத்து சட்டங்களுக்கும் மேலாக உள்ளது. வேறு எந்த சட்டமும் இந்த அரசியலமைப்பை மீற முடியாது.

சுவிட்சர்லாந்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் சுவிஸ் கூட்டாட்சி அரசியலமைப்பு மற்றும் சட்டத்தால் வழங்கப்பட்ட உரிமைகள் மற்றும் கடமைகள் உள்ளன. இவை ஒரு நபரின் நம்பிக்கைகளில் (உ+ம் அரசியல், மதம் அல்லது சமூகம்) தங்கியிருக்காது செல்லுபடியாகின்றன.

கூட்டாட்சி அரசியலமைப்பில் மிக முக்கியமான உரிமைகள் எழுதப்பட்டுள்ளன.

**பின்வருபவை செல்லுபடியாகின்றன**

- சட்டத்தின் முன் அனைவரும் சமம். இனவெறி மற்றும் பாரபட்சம் காட்டுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.
- ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை இருப்பதுடன் தமது வாழ்க்கையை தாமே சுயமாக தீர்மானிக்கின்றனர்.
- மற்றவர்களை அவமதிக்கவோ, அச்சுறுத்தவோ அல்லது வன்முறையைத் தூண்டவோ செய்யாத வரையில் ஒவ்வொரு மனிதனும் தனது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்த அனுமதி உண்டு.
- அனைத்து நபர்களும் தங்கள் மதத்தை பின்பற்றவும், தங்கள் நம்பிக்கையை அமைதியாக கடைப்பிடிக்கவும் சுதந்திரமாக உள்ளனர்.

# அன்றாட வாழ்வில் பொலிஸ்

சுவிட்சர்லாந்து ஒரு பாதுகாப்பான நாடு. ஆயினும் இங்கும் கூட குற்றச் செயல்கள் நடக்கி-ன்றன. மற்ற விஷயங்களில்


> பொது இடங்களில், உதாரணமாக பூங்காக்கள் மற்றும் உணவுச்சாலைகளில், ரயிலில், பேரு-ந்தில் அல்லது ரயில் நிலையங்களில்,

> உங்கள் சொந்த சுற்றாடலில், உதாரணமாக வீட்டில், பாடசலையில் அல்லது வேலையில் அல்லது

> இணையதளத்தில்.

சுவிட்சர்லாந்தில் உள்ள அனைவரையும் பாதுகாக்கும் பணி பொலிஸாருக்கு உள்ளது. இது சட்டங்களை நடை முறைப்படுத்துவதுடன் குற்றச்செயல்களை விசாரிக்கிறது.

உங்களுக்காகவே பொலிஸ் இருக்கிறது. நீங்கள் ஒரு குற்றச்செயலில் பாதிக்கப்பட்டவராகவோ அல்லது சாட்சியாகவோ இருந்திருந்தால் புகாரளிக்கவும். நீங்கள் ஆபத்தில் இருந்தால், உடனடி-யாக **அவசர அழைப்பு எண் 112** ஐ அழைக்கவும்.



# பொலீஸார் மேற்கொள்ளும் சோதனைகள்

பொலீஸ் பொதுமக்களின் பாதுகாப்பையும் ஒழுங்கையும் உறுதி செய்கிறது. இந்த நோக்க-த்திற்காக தனிமனித சோதனைகளை மேற்கொள்ளலாம். சோதனையின் போது பரஸ்பர-ம் கௌரவமாக நடந்து கொள்ளல் முக்கியமானது. இதனால் நிலைமை சுமுகமடைகிறது மற்றும் பொலீஸார் சோதனையை சுமுகமாக மேற்கொள்ள முடிகிறது.

நீங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டால், உங்கள் அடையாள அட்டையைக் காட்ட வேண்டு-ம் அல்லது உங்கள் அடையாளத்தை வேறு விதத்தில் சரிபார்க்க அனுமதிக்க வேண்டும்.

**பின்வருபவை செல்லுபடியாகின்றன**

> பொலிஸாரின் அறிவுரைகளைப் பின்பற்றுங்கள் மற்றும் நட்புடன் நடந்து கொள்ளுங்கள். உங்களுக்கு ஒரு கேள்வி அல்லது அறிவுறுத்தல் புரியவில்லை என்றால், "என்னால் உங்க-ளை புரிந்து கொள்ள முடியவில்லை" என்று கூறுங்கள்.

> உங்கள் கைகளை எப்போதும் பார்க்கக் கூடியவாறு வைத்துக்கொள்ளுங்கள் மற்றும், பொ-லீஸாரைத் தொடாதீர்கள்..

> உங்கள் பெயர் மற்றும் முகவரி பற்றிய தவறான தகவல்களை வழங்குவது தண்டனைக்கு-ரிய குற்றமாகும்.

> அவசியமான மேலதிக விசாரணைகளுக்காக உங்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லவதற்கான உரிமை பொலீஸாருக்கு உண்டு.


> சாத்தியமான குற்றச் செயலை விசாரிக்க அல்லது தடுக்க பொலீஸாருக்கு அனுமதி உண்டு உங்கள் உடைகள், உங்கள் பைகள் மற்றும் உங்களிடம் உள்ள பிற பொருட்களைச் சோதி-க்க உரிமை உண்டு.

பொலீஸாரும் கூட விதிகளை கடைப்பிடிக்க வேண்டும் மற்றும் ஒப்பீட்டளவில் நியாயமாக செயல்பட வேண்டும்.

> தனி நபரை சோதனை செய்ய பொலீஸாருக்கு ஒரு காரணம் (உறுதியான ஆதாரம்) இருக்க வேண்டும். சாதாரணமாக, சோதனைக்கான காரணத்தை பொலீஸார் அறிவிக்க வேண்டும்.

> பொலிஸ் சீருடை அடையாளமாக செல்லுபடியாகின்றது. பொலிஸார் சிவில் உடையில் தோன்றினால், பொலிஸ் அடையாள அட்டையைக் காட்டி தங்களை அடையாளம் காட்ட வேண்டும்.

தனிநபர் சோதனை ஒன்றின் பொழுது நீங்கள் பொலீஸாரினால் சட்டவிரோதமாக நடத்தப்ப-ட்டதாக உணர்ந்தால், பொலிஸ் அதிகாரியின் பெயரைக் கேட்டு திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை குறிப்பெடுக்கவும். சம்பவம் குறித்து அந்தந்த பொலிஸ் நிலையத்தின் புகார் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யவும்.



# வன்முறை ஏற்பட்டால் என்ன செய்வது?

## பொதுவான வன்முறை

*எந்தவொரு வடிவத்திலான வன்முறையும் சுவிட்சர்லாந்தில் தண்டனைக்குரியது - அது பொது இடத்தில் இருந்தாலும் அல்லது வீட்டில் குடும்பத்தில் இருந்தாலும் சரி. உங்கள் பாதுகாப்பிற்கும் மற்றும் ஆதரவிற்கும் சில பரிந்துரைகள் உள்ளன.*

***பின்வருபவை செல்லுபடியாகின்றன***
*வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுக்கு நேர்ந்ததற்கு அவர்களே காரணமில்லை. யார் குற்றம் செய்தாரோ, அவர் மட்டுமே குற்றவாளி.*

*உதவி பெறுங்கள். அவசரநிலையில், அவசர அழைப்பு எண் 112 ஐ அழைக்கவும். கடந்த காலத்தில் வன்முறைச் செயல் நடந்திருந்தாலும், நீங்கள் ஆலோசனை நிலையம் ஒன்றுடன் மற்றும்/அல்லது பொலிஸிடம் பேச வேண்டும்.*

***வன்முறைச் செயலின் போது***
*வன்முறைச் செயல் ஒன்றின் பொழுது உங்களால் செயல்பட முடிந்தால், பின்வருவனவற்றை செய்ய முயற்சிக்கவும்:*

> *அவசரகாலத்தில், பொலிஸாருக்குத் தெரிவிக்கவும் (அவசர அழைப்பு எண் 112) – ஒரு தடவை மட்டுமல்ல, பல தடவை முயற்சிப்பது நல்லது.*

> *அச்சுறுத்தும் நபரிடமிருந்து நீங்கள் விலகி இருங்கள் மற்றும் நட்பாக இருங்கள்.*

> *மற்றவர்களுக்கு தீவிரமாக உதவ அல்லது உங்கள் கவனத்தை ஈர்க்கும்படி கேளுங்கள், எடுத்துக்காட்டாக, "நீங்கள்: சிவப்பு ஜேக்கெற் அணிந்திருப்பவர், பொலிஸை அழைக்கவும்."*

***வன்முறைச் செயலுக்குப் பின்***

> *குற்றம் நடந்த இடத்தில் எதையும் மாற்ற வேண்டாம்: எந்த தடயங்களையும் அழிக்க வேண்டாம்.*

> > *எதையும் ஒழுங்கமைக்கவோ அல்லது சுத்தம் செய்யவோ வேண்டாம்.*

> > *நீங்கள் அணிந்திருந்த ஆடைகளையும் கூட துவைக்கக் கூடாது.*

> *உங்கள் குடும்ப மருத்துவரால் அல்லது மருத்துவமனையில் முடிந்தவரை விரைவாக உடல் காயங்களை பற்றி ஆவணப்படுத்துங்கள் (அதிகபட்சம் 72 மணித்தியாலத்திற்குள்). ஆவணப்படுத்துதல் முக்கியமானதொரு சான்றாகும்.*

> *உதவியை பெறுங்கள். ஆலோசனை நிலையம் ஒன்றை அல்லது பொலிஸாரை (அவசர அழைப்பு எண் 112 அல்லது உங்கள் தெரிவில் ஒரு பொலிஸ் நிலையத்தை) தொடர்பு கொள்ளவும்.*

> *ஆலோசனை நிலையங்களும் பொலிஸும் உங்களுக்கு இலவசமாக உதவும்.*

> *பொலிஸாருக்கு தெரிவிக்காமல் ஆலோசனை நிலையத்தை தொடர்பு கொள்ளலாம்.*

> *தற்காலிக வதிவிட அந்தஸ்துடன் உள்ளவர்க்ளுக்கு கூட ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கான சட்ட உரிமை உள்ளது.*

- உங்களுக்கு மொழிச் சிக்கல்கள் இருந்தால், மொழிபெயர்ப்பாளர் ஒருவரை பெற்றுக் கொள்வதற்கான சட்ட உரிமை உங்களுக்கு உள்ளது.

**ஆலோசனை நிலையமொன்றில் உதவியை நாடுதல்**
நீங்கள் வன்முறையை அனுபவித்திருந்தால் பல்வேறு ஆலோசனை நிலையங்கள் உங்களுக்கு ஆதரவளிக்கலாம் (கடைசிப் பக்கத்தைப் பார்க்கவும்):


- அவர்கள் உங்கள் பேச்சைக் கேட்கிறார்கள்,
- அவர்கள் உங்கள் உரிமைகள் மற்றும் சாத்தியமான குற்றவியல் நடவடிக்கைகளை உங்களுக்கு விளக்குகிறார்கள்,
- அவர்கள் உங்களுக்கு உளவியல் உதவியை வழங்குகிறார்கள் மற்றும்
- நீங்கள் விரும்பினால் அவர்கள் உங்களை பொலிஸாரிடம் அழைத்துச் செல்கின்றனர்.

பொலிஸாரிடம் தெரிவிக்காமல் ஆலோசனை நிலையமொன்றை தொடர்பு கொள்ளலாம். ஆலோசனை நிலைஙங்கள் உங்கள் சம்மதத்துடன் மட்டுமே பொலிஸை தொடர்பு கொள்ளலாம்.

**பொலிஸாரிடம் உதவியை நாடுதல்**
நீங்கள் ஒரு குற்றச்செயல் பற்றி பொலிஸாருக்கு தெரிவிக்க விரும்பினால் (முறைப்பாடு செய்தல்), நீங்கள் சுவிட்சர்லாந்தில் உள்ள எந்த பொலிஸ் நிலையத்தையும் நேரில் தொடர்பு கொள்ளலாம்.

- பொலிஸார் சம்பவம் குறித்து உங்களிடம் விசாரித்து நீங்கள் கூறுவதை எழுதுவார்கள். சூழ்நிலையைப் பொறுத்து, இது மன அழுத்தத்தை ஏற்படுத்தும்.
- ஆலோசனை நிலையம் ஒன்றிலிருந்து ஆலோசனை பெறுவதற்கான உரிமை மற்றும் உங்கள் நம்பிக்கைக்குரிய ஒருவரை உங்களுடன் அழைத்துச் செல்வதற்கான உரிமை உங்களுக்கு உண்டு.
- பாலியல் வன்முறையைப் பற்றியது என்றால், சாத்தியமாக இருப்பின், உங்கள் பாலினத்தைச் சேர்ந்த ஒருவரால் நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்.
- உங்களிடம் சான்றுப் பொருட்கள் இருந்தால், உதாரணமாக புகைப்படங்கள், ஆடைகள் போன்றவை, உங்களுடன் எடுத்துச் சென்று பொலிஸாருக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.
- உங்களுக்கு மொழிச் சிக்கல்கள் இருந்தால், மொழிபெயர்ப்பாளர் ஒருவரை பெற்றுக் கொள்வதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.

தீவிரமான சம்பவங்களில், பாதிக்கப்பட்டவர் அல்லாமல் வேறொருவர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தாலும் பொலிஸார் விசாரிக்கின்றனர். அரசு வழக்கறிஞர் அலுவலகம் அல்லது நீதிமன்றம் தண்டனையை முடிவு செய்யும்.



# குடும்பத்தில் வன்முறை

*குடும்ப வன்முறை என்பது குடும்பத்தினுள் அல்லது வாழ்க்கைத் துணைவர்களுக்கிடையில் நடக்கும் வன்முறை மற்றும் அது சுவிட்சர்லாந்தில் தண்டனைக்குரியது. எடுத்துக்காட்டாக, தரக்குறைவாக பேசுதல், பணத்தை (பறித்து) எடுத்தல், அவமானப்படுத்துதல் மற்றும் கடுமையான உடல் ரீதியான வன்முறை, பாலியல் வன்கொடுமை மற்றும் ஒருவரின் சொந்த குழந்தைகள், பெற்றோர்கள், துணைவருக்கு எதிராக வற்புறுத்துதல் ஆகியவை இதில் அடங்கும். சிறுமிகள் மற்றும் பெண்களின் பிறப்புறுப்பை வெட்டுதல், கட்டாய திருமணம் மற்றும் "சுயகௌரவம்" காரணங்களுக்காக வன்முறை ஆகியவையும் தடைசெய்யப்பட்டுள்ளன.*

*குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அதைப் பற்றி அறிந்தவர்கள் (உ+ம். குழந்தைகள், அயலவர்கள் அல்லது நண்பர்கள்) பொலிஸாருக்கு தெரிவிக்கலாம். குடும்பத்தில் வன்முறை ஏற்பட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க பொலிஸ் கடமைப்பட்டுள்ளது.*

**பின்வருபவை செல்லுபடியாகின்றன**

> *உதவியை பெறுங்கள். ஆலோசனை நிலையம் ஒன்றுடன் மற்றும் / அல்லது பொலிஸாருடன் பேசுங்கள்.*

> *உதாரணமாக, அவசரகாலத்தில் நீங்கள் எங்கு உதவி பெறலாம் என்பதை முன்கூட்டியே விசாரித்து அறியவும் உ+ம் அயலவர்கள்.*

> *பொலிஸாருக்கும் (அவசர அழைப்பு எண் 112) மற்றும் உங்கள் நம்பிக்கைக்குரிய நபர்களின் முக்கியமான எண்களை எழுதி, எளிதில் அணுகக்கூடிய இடத்தில் வைக்கவும்.*

> *உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் முக்கியமான ஆவணங்களை உங்கள் நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் வைத்துக் கொள்ளுங்கள்.*

**வெளியாட்களுக்கு**


> *ஒருவேளை அவசரம் என்றால்: உங்களையே நீங்கள் ஆபத்துக்குள்ளாக்காதீர்கள். பொலிஸ் அவசர எண் 112 மூலம் உடனடியாக தெரிவிக்கவும்.*

> *குடும்ப வன்முறை பற்றி சந்தேகப்பட்டால்: உங்கள் சந்தேகங்களைப் பற்றி சம்பந்தப்பட்ட நபரிடம் பேசுங்கள். சம்பந்தப்பட்ட நபருடன் ஆலோசனை நிலையம் ஒன்றுக்கு அல்லது பொலிஸாரிடம் அழைத்துச் செல்ல வாய்ப்பளிக்கவும்.*

*பொலிஸார் அழைக்கப்பட்டால், அவர்கள் வன்முறையில் ஈடுபடும் நபரை அழைக்க அனுப்பிவிட்டு, பல நாட்களுக்கு அந்த நபர் வதிவிடதிற்குத் திரும்புவதைத் தடைசெய்யலாம்.*

**பாதுகாப்பான தங்குமிடம்**
*வாழ்க்கைத் துணைவர்களுக்கும் மற்றும் குழந்தைகளுக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டால், அவர்கள் ஒரு பாதுகாப்பான தங்குமிடத்தில் தங்கி இருக்கலாம். இடம் ரகசியமானது மற்றும் தங்குவதற்கு எந்த செலவும் இல்லை. ஆண்களையும் கூட பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லலாம்.*

**குடியிருப்பு உரிமை**
*குடும்ப உறுப்பினர்களுடன் வாழ்வதற்கென வந்த நபர்கள் பின்னர் வன்முறையை அனுபவிப்பின், தங்கள் வாழ்க்கைத் துணைவரிடமிருந்து பிரிந்து, தமக்கென சுயாதீனமான குடியிருப்பு அனுமதியைப் பெற முடியும். இதைச் செய்ய, நீங்கள் வன்முறையை அனுபவித்திருப்பதை நிரூபிக்க வேண்டும் மற்றும் மருத்துவ சான்றிதழ்கள், போலீஸ் அறிக்கைகள் அல்லது பாதிக்கப்பட்ட ஆலோசனை மையங்களில் இருந்து அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.*



# பாலியல் வன்முறை

பாலியல் வன்முறை என்பது எந்தவொரு வடிவத்தில் மேற்கொள்ளப்படும் கட்டாய பாலியல் செயல்பாடு மற்றும் பாலியல் குறிப்புடன் எல்லை மீறும் நடத்தை ஆகியவற்றை உள்ளடக்கியது. பல்வேறு வடிவத்திலான பாலியல் வன்முறைகள் உள்ளன. உதாரணத்திற்கு:

- பொதுப் போக்குவரத்தில் ஒரு வேற்று நபர் காட்டும் விரும்பத்தகாத நெருக்கம்
- ஒரு உயரதிகாரியின் விரும்பத்தகாத பாலியல் (நோக்கத்துடனான() தொடுதல்கள்
- ஒரு சக வகுப்பு மாணவரின் விரும்பத்தகாத பாலியல் படங்கள்
- கணவன் அல்லது மனைவியின் விருப்பத்திற்கு எதிரான பாலியல் செயல்கள்

**பின்வருபவை செல்லுபடியாகின்றன**

- உடல் நெருக்கம் என்பது பாதிக்கப்பட்ட அனைவரினதும் சம்மதத்துடன் மட்டுமே.
- 16 வயதுக்குட்பட்டவர்களுடன் பெரியவர்கள் செய்யும் பாலியல் செயல்கள் அடிப்படையில் தண்டனைக்குரியவை.
- ஆடை அணிவதற்கும் வெளியே செல்வதற்கும் எந்த ஒழுங்கு விதிகளும் இல்லை. ஒருவர் எப்படி ஆடை அணிந்தாலும், மது அருந்தினாலும், நடனமாடினாலும், சரசமாடினாலும் அல்லது தாமதமாக வெளியில் சென்றாலும் பரவாயில்லை: யாரோ ஒருவர் பேச வேண்டும் அல்லது தொட வேண்டும் என்று இது அர்த்தப்படுத்துவதில்லை.
- மக்கள் ஏற்கனவே வார்த்தைகள், பார்வை அல்லது உடல்மொழி போன்றவற்றின் மூலம் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுதை உணர்ந்து கொள்ள முடியும்.
- யாராவது எதிர்க்கவில்லை என்றால், அந்த நபர் பாலியல் ரீதியான தொடர்பு, தொடுதல், உடலுறவு போன்றவற்றை ஒப்புக்கொள்கிறார் என்று அர்த்தமல்ல. மற்ற நபரும் பாலியல் செயல்களை விரும்புகிறாரா என்பதை தெளிவுபடுத்துவது எப்போதும் முக்கியம்.



***நீங்கள் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டிருந்தால்***

> பாதுகாப்பான இடமொன்றுக்குச் செல்லுங்கள்.

> உங்கள் நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் பேசுங்கள். இது ஆசிரியராகவோ, மத்திய நிர்வாகமாகவோ, மருத்துவராகவோ, ஆலோசனை மையமாக-வோ அல்லது பொலிஸாகவோ இருக்கலாம்.

> குற்றம் நடந்த இடத்தில் எதையும் மாற்ற வேண்டாம்: எந்த தடயங்க-ளையும் அழிக்க வேண்டாம்.

  > குளிக்க வேண்டாம்.

  > எதையும் ஒழுங்கமைக்கவோ அல்லது சுத்தம் செய்யவோ வே-ண்டாம்.

  > நீங்கள் அணிந்திருந்த துணிகளையும் துவைக்கக் கூடாது.

> கூடிய விரைவில் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுங்கள் (பொறுப்பான மருத்துவமனை).

## கட்டாய திருமணம் மற்றும் கட்டாயத் தாம்பத்தியம்

*சுவிட்சர்லாந்தில், ஒவ்வொரு நபரும் தாங்கள் யாரை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறா-ர்கள் மற்றும் திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றனரா என்பதையும் சுதந்திரமாக தீர்மா-னிக்க முடியும். ஒரே பாலின இணைவு அனுமதிக்கப்படுகிறது. வற்புறுத்தல் மற்றும் அழுத்த-ம் பிரயோகிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. அழுத்தம் மற்றும் வற்புறுத்தல் மூலமான திரு-மணம் செல்லாது என்று அறிவிக்கப்படுகிறது. தாங்கள் திருமண/வாழ்க்கைத்துணையாக இரு-க்க வேண்டுமா அல்லது பிரிந்து வாழ வேண்டுமா என்பதைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரமும் தனிநபர்களுக்கு உண்டு.*

*நீங்கள் அல்லது உங்கள் நட்பு வட்டத்தில் உள்ள ஒருவர் கட்டாயத் திருமணம் அல்லது கட்டாயத் திருமணத்தால் பாதிக்கப்பட்டிருந்தால், உங்கள் நம்பிக்கைக்குரிய ஒருவருக்குத் தெரிவித்து, ஆலோசனை நிலையத்தைத் தொடர்புகொள்ளவும்.*



# பின்தொடர்ந்து துன்புறுத்துதல்

பின்தொடர்ந்து துன்புறுத்துதல் என்பது ஒரு நபரை ஒருவர் மீண்டும் மீண்டும் தொடர்புகொ-ள்வது அல்லது, மற்றநபர் அவரை விரும்பவில்லை என்று சொன்னாலும் அல்லது வெளி-க்காட்டினாலும், கூட துன்புறுத்துவது. பாதிக்கப்பட்ட நபருக்கு இது மிகவும் மன அழுத்த-த்தை ஏற்படுத்துகிறது. பின்தொடர்ந்து துன்பப்படுத்துதல் செயல்களில், மீண்டும், மீண்டு-ம் தொலைபேசி அழைப்புகள், அச்சுறுத்தும் செய்திகள், தினசரி மின்னஞ்சல்கள், வேலை அல்லது வீட்டிற்கு வருகை, வழக்கமான பரிசுகள், பொது உளவு பார்த்தல் மற்றும் கண்கா-ணிப்பு ஆகியவை அடங்கும். பின்தொடர்ந்து துன்புறுத்தல் - செயல்களில் தனிப்பட்ட செய-ல்களும் தண்டனைக்குரியதாக இருக்கலாம்.

**நீங்கள் பின்தொடர்வதால் பாதிக்கப்பட்டிருந்தால்**

> நீங்கள் எந்த தொடர்பையும் விரும்பவில்லை என்று வெளிப்படையாகவும் மற்றுமொரு தடவை அறிவிக்கவும்.

> பின்னர், உறுதியாக இருங்கள்: தொலைபேசி அழைப்புகள், மின்னஞ்சல்கள் போன்றவற்று-க்கு பதிலளிக்க வேண்டாம், மற்றும் பரிசுகளை ஏற்க வேண்டாம்.

> உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்குத் தெரிவிக்கவும்: குடும்பத்தினர், நண்பர்கள், பணிபுரியும் சக ஊழியர்கள் மற்றும் அயலவர்கள். இவர்கள் உங்களுக்கு ஆதரவு வழங்கலாம்.

> திகதி, இடம், நேரம் மற்றும் சாட்சிகளுடன் (பின்தொடர்தல் டைரி) அனைத்து பின்தொட-ர்தல் செயல்களையும் ஆவணப்படுத்தவும்.


> ஆலோசனை பெறவும். ஆலோசனை நிலையங்களும் பொலிஸாரும் உங்களுக்காக உள்ளன.



# வெறுக்கத்தக்க குற்றச் செயல்கள்

வெறுக்கத்தக்க குற்றங்கள், வெறுப்புக் குற்றச் செயல்கள் என்றும் அழைக்கப்படுகின்றன, ஒரு குறிப்பிட்ட இனக்குழுமத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதன் காரணமாக அவர்கள் மீது மே-ற்கொள்ளப்படும் தாக்குதல்கள் ஆகும். உதாரணமாக, அவர்களின் மதம், அவர்களின் பாலியல் நோக்குநிலை, அவர்களின் பாலின அடையாளம், அவர்களின் இனம் அல்லது குறைபாடு அல்ல-து ஊனமுற்று இருத்தல் காரணமாக.

அவமானப்படுத்துதல், அச்சுறுத்தல்கள், உடல் அல்லது உளவியல் தாக்குதல்கள் அல்லது பா-லியல் வன்முறை: வெறுக்கத்தக்க குற்றச் செயல்கள் குறித்து பொலீஸாருக்கு அவசர அழை-ப்பு எண் 112 அல்லது காவல் நிலையத்தில் புகாரளிக்கவும்.



# தீவிரமயமாக்கல் மற்றும் தீவிரவாதம்

தீவிரமயமாக்கல் என்பது ஒருவர் தீவிரவாதக் கருத்துக்களை தன்னுள் வளர்த்தெடுக்கும் செ-யல்முறை என்பதுடன் இது அவரை அனேகமாக வன்முறைக்கு ஆளாக்குகின்றது. தீவிரமய-மாக்கலுக்கு அரசியல், சமூக, கருத்தியல் அல்லது மதக் காரணங்கள் இருக்கலாம். குறிப்பாக இளைஞர்கள் இதனால் பாதிக்கப்படலாம்.

தீவிரமயமாக்கலின் சாத்தியமான அறிகுறிகளாக, எடுத்துக்காட்டாக, ஆளுமையில் மாற்றம், வாழ்க்கைமுறையில் மாற்றம், உலகை ஒருவரின் சொந்தக் கண்ணோட்டத்தில் மட்டுமே பா-ர்ப்பது, தீவிரவாத வன்முறையை மகிமைப்படுத்துதல் மற்றும்/அல்லது பிரச்சினைக்குரிய கா-ணொளிகளை பரப்புதல் ஆகியவை அடங்கும்.

உங்கள் சுற்றாடலில் இதுபோன்ற அறிகுறிகளை நீங்கள் அவதானிக்கும் பட்சத்தில், ஒரு பரா-மரிப்பாளர், உள்ளூர் தொடர்பு நிலையம் அல்லது பொலிஸைத் தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாக முன்கூட்டியே சாத்தியமான எதிர்மறையான விளைவுகளை தடுக்க முயற்சிக்க முடி-யும்.

# ஆயுதங்கள் இல்லாமல் பாதுகாப்பாக பயணம் செய்தல்

துப்பாக்கிகள், தடைசெய்யப்பட்ட கத்திகள் மற்றும் மக்களை அச்சுறுத்தும் அல்லது காயப்படுத்தக்கூடிய ஆபத்தான பொருட்களை வைத்திருப்பது அல்லது எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. பொலிஸாரினால் இவை (உங்களிடமிருந்து) எடுக்கப்படுகின்றது.

**பின்வருபவை செல்லுபடியாகின்றன**

> கத்தியை வீட்டிலேயே விட்டுவிடுங்கள். மோதல் சூழ்நிலைகளில் கத்தியைப் பயன்படுத்த நீங்கள் முயற்சிக்க மாட்டீர்கள் என்பதே இதன் பொருள். கத்தியை எடுத்துச் செல்வது தற்காப்பு அல்ல. கத்தி உங்களுக்கு எதிராக மிக விரைவாக பயன்படுத்தப்படலாம், இது உங்களை ஆபத்தில் ஆழ்த்துகிறது.

> கவனத்தில் கொள்ளுங்கள்: வெறுமனே கத்தியை எடுத்துச் செல்வது ஒரு குற்றச் செயலாக அமையலாம்.

**கத்தியைக் காட்டி நீங்கள் மிரட்டலுக்கு ஆளாகினால்,**

> மோதலை ஏற்படுத்த பார்க்காதீர்கள்.

> தப்பி ஓடுங்கள்.

> உடனடியாக அவசர அழைப்பு எண் 112 ஐ அழைக்கவும்.

**முக்கியமானது:** சிறிய கத்திகள் கூட கடுமையான காயங்களை அல்லது மரணத்தை ஏற்படுத்தலாம்.



# மது மற்றும் போதை மருந்துகள்

18 வயதிலிருந்தே மது அருந்துவது அனுமதிக்கப்படுகிறது; வைன் மற்றும் பீரை 16 வயதிலிருந்தே உட்கொள்ளலாம்.

இரத்தத்தில் 0.25 mg/l க்கும் அதிகமான அல்கஹோல் உள்ள எவரும் இனி வாகனம் ஓட்ட அனுமதிக்கப்பட மாட்டார்கள் (கார், மோட்டார் சைக்கிள், - ஸ்கூட்டர், சைக்கிள் போன்றவை).

ரயில்கள், டிராம்கள், பேருந்துகள், கப்பல்கள் மற்றும் மூடப்பட்ட பொது இடங்கள் (உ+ம் உணவுச் சாலைகள்) ஆகியவற்றில் புகைபிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.


ஹேராயின், கொக்கேன், எக்ஸ்டசி, கஞ்சா மற்றும் மரியுவானா போன்ற போதை மருந்துகளை வைத்திருத்தல், பாவித்தல், உற்பத்தி செய்தல் மற்றும் வர்த்தகம் செய்தல் ஆகியவை தடை செய்யபட்டுள்ளன. தனிப்பட்ட பயன்பாட்டிற்காக (10 கிராமுக்கும் குறைவாக) கஞ்சவை வைத்திருப்பது அனுமதிக்கப்படுகிறது.



# இரவு அமைதியை குழப்புதல் மற்றும் ஒலி எழுப்பி தொல்லை தருதல்

சுவிட்சர்லாந்தில் இரவில் அமைதியைக் கடைப்பிடித்தல் முக்கியம். எல்லா மக்களுக்கும் அமைதி மற்றும் ஓய்வு எடுத்தல் பாதுகாக்கப்படுகிறது. தேவையற்ற சத்தத்தை ஏற்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

**பின்வருபவை செல்லுபடியாகின்றன**
இரவு அமைதி ஒவ்வொரு நாளுக்கும் இரவு 10 மணி முதல் செல்லுபடியாகும். இந்த நேரத்தில், நீங்கள் சத்தம் எழுப்புதை தவிர்க்க வேண்டும் (உ+ம். சத்தமான இசை, சத்தமாக பேசுதல் போன்றவை). இது வீட்டிலும் பொது இடங்களிலும் பொருந்தும்.




# சட்டங்கள் பின்பற்றப்படாவிட்டா-ல் என்ன நடக்கும்?

**குற்றச் செயலை செய்பவருக்கு சாத்தியமான விளைவுகள்**

- *சட்ட ரீதியான குற்றவியல் விளைவுகள்:*
  *அபராதம், பணத்தண்டம், சிறை*
- *சிவில் சட்ட ரீதியான விளைவுகள்:*
  *நிதிச் சிக்கல்கள் (சேதத்தை ஈடுசெய்தல், இழப்பீடு செலுத்துதல்)*
- *தனிப்பட்ட விளைவுகள்:*
  *வீட்டிலிருந்து வெளியேற்றப்படல் (உ+ம். குடும்ப வன்முறை வழக்கில்), சேர்த்தல், /வி-லக்கு, குடும்பத்தில் உள்ள பிரச்சனைகள், சிரமங்கள் வேலை அல்லது வதிவிடம் தேடும் போது, வதிவிட அந்தஸ்த்தை பாதிக்கும்*






# தெருவில் பாதுகாப்பாக பயணித்தல்

வீதிப்போக்குவரத்தில் நாம் பாதுகாப்பாக இருக்க, வீதியில் ஒழுங்கு விதிகள் உள்ளன. இவை நடக்கும்போதோ, மோட்டார்சைக்கிள், காரில் அல்லது பிற வாகனங்களில் செல்லும் பொழுது கடைப்பிடிக்கப்பட வேண்டும். விபத்துகளைத் தவிர்ப்பதற்கு, வீதியைப் பயன்படுத்துபவர்கள் அனைவரும் மரியாதையுடனும், முன்மாதிரியாகவும் இருப்பதுடன் வாகனம் ஓட்டும் போதும் மற்றும் பிற நபர்களுக்கும், வாகனங்களுக்கும் கரிசனை காட்டுவது முக்கியம்.


## நடக்கும்போது



***பாதசாரிகள் கடக்குமிடம்:***

*கார்நிறுத்தப்பட்டு இருக்கும்போது மட்டுமே புறப்படுங்கள் (கண் தொடர்பு).*


---



***சமிக்ஞை நடைபாதை:***

*நடைபாதையைப் பயன்படுத்தவும்.*


---



***நடைபாதை:***

*நடைபாதையைப் பயன்படுத்தவும். நடைபாதை இல்லை என்றால், வீதியின் ஓரத்தில் நடக்க வேண்டும்.*

---



***போக்குவரத்து விளக்கு:***

*சிவப்பு நிறத்தில் காத்திருங்கள், பச்சை நிறத்தில் செல்லுங்கள்.*


# சைக்கிள் மூலம்



***சைக்கிள் தலைக்கவசம்:***

சைக்கிள் தலைக்கவசம் அணிவது முக்கியம்.


---



***வீதியின் குறுக்கே கடத்தல்:***

சமிக்ஞைகள் மற்றும் முன்னுரிமையில் கவனம் செலுத்துங்கள்.


---



***சைக்கிள் பாதை சிக்னல்:***

சைக்கிள் பாதையைப் பயன்படுத்தவும்.


---



***சைக்கிள் பாதை இல்லை:***

வீதியைப் பயன்படுத்தி வலது புறம் ஓட்டவும்.

---



***திருப்புவதற்கு முன்:***

சுற்றிப் பார்த்து கை சமிக்ஞைகளைக் காட்டுங்கள்.


---



***சைக்கிளில்:***

தனியாக மட்டும் ஓட்டுங்கள்.


# பிற முக்கியமான தகவல்கள், சட்டங்கள் மற்றும் சமிக்ஞைகள்



**இருட்டில்:**

வெளிர் நிற ஆடைகளை அணியுங்கள் மற்றும் உங்கள் சைக்கிள் விளக்குகளை இயக்கவும்.

---



**இருக்கை பட்டி அணிவதற்கான கடப்பாடு:**

வாகனம் ஓட்டும்போது எப்போதும் பாதுகாப்புப் பட்டியை (பெல்ட்) அணியுங்கள். பின் இருக்கையில் இருப்பவர்களும் கண்டிப்பாக (பாதுகாப்புப்) பட்டியை அணிய வேண்டும்.

---



**கைபேசி:**

வாகனம் ஓட்டும்போது கைபேசியை பயன்படுத்த வேண்டாம்.

---



**மது மற்றும் போதை மருந்துகள்:**

வீதிபோக்குவரத்தின் பொழுது மது அல்லது போதைப்பொருள்களை உட்கொள்ளாதீர்கள்.

---




**சமிக்ஞைகளில் கவனம் செலுத்துங்கள்:**

சமிக்ஞைகள் யாருக்கு முன்னுரிமை உள்ளது மற்றும் நீங்கள் எங்கு ஓட்டலாம் என்பதைக் காட்டுகிறது. அவை ஆபத்துகளையும் சுட்டிக்காட்டுகிறன.

---



**பயணச் சீட்டு (டன் பயணிப்பதற்கான) கடப்பாடு:**

பொதுப் போக்குவரத்து இலவசம் அல்ல. செல்லுபடியாகும் ஒரு பயணச் சீட்டுடன் பயணிக்கவும்.

# உதவி மற்றும் ஆலோசனை

***அவசரகாலத்தில் உதவி (இலவச தொலைபேசி எண்கள், எந்த நேரத்திலும் கிடைக்கும்)***

*அவசர அழைப்பு* ..... **112**

*பெண்களுக்கான பொலிஸாரை தொலைபேசியில் தொடர்புகொள்ளல் (இயந்திர பதில்; பெண் பொலிஸ் அதிகாரி மீண்டும் அழைக்கிறார்)* ..... **031 332 77 77**

*வழங்கும் கை – பெரியவர்களுக்கான அநாமதேய உதவி மற்றும் ஆலோசனை* ..... **143**

*Pro Juventute – சிறுவர்கள் மற்றும் இளையோர்களுக்கான அநாமதேய உதவி மற்றும் ஆலோசனை* ..... **147**

***பொது ஆலோசனை மற்றும் சட்ட ஆலோசனை***

*ISA – வெளிநாட்டினரின் பிரச்சினைகள் மற்றும் வெளிநாட்டினரின் கேள்விகளுக்கான தகவல் மற்றும் ஆலோசனை நிலையம்* ..... **031 310 12 72**
*www.isabern.ch*

*அவசர தேவை உள்ளவர்களுக்கான பெர்ன் சட்ட ஆலோசனை நிலையம்* ..... **031 385 18 20**
*www.rechtsberatungsstelle.ch*

*சுவிஸ் அகதிகள் உதவி* ..... **031 370 75 75**
*www.fluechtlingshilfe.ch*

*புகலிட உதவி பெர்ன்* ..... **076 700 49 40**
*www.asylhilfe.ch*

*CSP Berne-Jura* ..... **032 493 32 21**
*www.csp.ch*

*Frabina – இருநாட்டு உறவுகளில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஆலோசனை நிலையம்* ..... **031 381 27 01**
*www.frabina.ch*

*பொது தகவல் மற்றும் ஆதரவு சலுகைகள்* ..... **www.hallo-bern.ch/hg**

*பெர்ன் மாநில பொலிஸ் புகார் அலுவலகம்* ..... **beschwerdestelle@police.be.ch**

**குடும்ப மற்றும் பாலியல் வன்முறை பற்றிய ஆலோசனை**

*பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி பேர்ண்* ........ **031 370 30 70**
*www.opferhilfe-bern.ch*

*பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி பில்* ........ **032 322 56 33**
*www.opferhilfe-bern.ch*

*லந்தானா (பாலியல் வன்முறை) பேர்ண்* ........ **031 313 14 00**
*www.stiftung-gegen-gewalt.ch*

*விஸ்டா (பாலியல் மற்றும் குடும்ப வன்முறை) துன்* ........ **033 225 05 60**
*www.stiftung-gegen-gewalt.ch*

*குழந்தைகள் பாதுகாப்புக் குழு* ........ **031 632 94 86**

*பேர்ண் நகரத்திற்கான நிபுணத்துவ நிலையம் குடும்ப வன்முறைத்* ........ **031 321 63 02**
*www.bern.ch*

*பின்தொடர்தல் - ஆலோசனைத் துறை – பெர்ன்* ........ **031 321 68 97**
*www.bern.ch*

*Zwangsheirat.ch (கட்டாயத் திருமணம்)* ........ **0800 800 007**
*www.zwangsheirat.ch*

*குற்றவாளிகளுக்கான கற்றல் திட்டம்: குடும்ப வன்முறைக்கு*
*எதிரான பெர்னின் தலையீடு மையம்* ........ **031 633 50 33**
*www.big.sid.be.ch*

**தீவிரமயமாக்கல்**

*தீவிரமயமாக்கல் மற்றும் வன்முறை தடுப்புப் பிரிவுக்கான நிபுணத்துவ நிலையம்* ........ **031 321 76 53**
*www.bern.ch*

*பில் நகரத்திற்கான தீவிரவாதம் மற்றும் வன்முறை*
*தடுப்புக்கான மத்திய தொடர்பு நிலையம்* ........ **032 326 18 80**
*www.biel-bienne.ch*

**இனவெறி/பாகுபாடு காட்டுதல்**

*gggfon – வன்முறை மற்றும் இனவெறிக்கு எதிராக ஒன்றியம்* ........ **031 333 33 40**
*www.gggfon.ch*

*LGBTIQ உதவி லைன்* ........ **0800 133 133**
*www.lgbtiq-helpline.ch*

*இந்த மற்றும் பிற மொழிகளில், ஒன்றாக வாழ்வது பற்றிய தகவல் காணொளிகளை எங்கள் இணையதளத்தில் காணலாம்:*

police.be.ch

**Bern Cantonal Police**
Waisenhausplatz 32
3011 Bern